IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.
C.C.NO.148/2022
DEPOSITION OF WITNESS P.W.4

| | | |
|---|---|---|
| NAME | : | ANANDHAKUMAR |
| FATHER'S NAME | : | GOPAL |
| VILLAGE | : | KATPADI |
| OCCUPATION | : | SI |
| AGE | : | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 15th day of JUNE 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது காடப்ாடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின் சாட்சிகள் அரசு தரப்பிற்கு ஆதாரவளிக்காமல் பிறழ் சாட்சியம் ஆனதால் குவிமுச 311 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 20.05.2021 ம் தேதி காலை 11.00 மணயிளவலி் காவல் ஆய்வாளர் திருநாவுக்கரசு என்பவர் நிலைய பொறுப்பில இருந்தபோது காட்பாடி காவல் துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலரின் உத்தரவின் பேரில் வேலூர் விஜடி சூர்யா பாஸட்புட் கடை அருகே உதவி ஆய்வாளர் சிவகுருநாதன் , சிறப்பு உதவி ஆய்வாளர் முருகன், இரண்டாம் நிலை காவலர் சத்தியராஜ் ஆகியோருடன் கொரோனா கால ஊரடங்கு கபாதுகாப்பு பணியில் ஈடுபட்ட போது அங்கு சந்தேகத்தின் படியாக ஈடுபட்டிருந்த நபர்களை பிடித்து விசாரித்த போது அவர்கள் ஜெயசந்திரன் என்கின்ற பாலு த/பெ ரவீந்திரன், ராஜேஷ் என்கின்ற புருஷோத்தமன் த/பெ தமிழ்சந்திரன், குமரேசன் த/ப ராஜி என தெரிய வந்தது. அவர்கள் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டுகளை விற்பனை செய்ததை கொரோனா உத்தரவை மீறியும் தெரிந்து காலை 11.15 மணிக்கு காரணம் கூறி கைது செய்து மூன்று தெிரிகளில் ஒருவரானஜெயச்சந்திரன் என்கின்ற பாலு தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் மூர்த்தி, இம்தியாஸ் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். பின்னர் அந்த ஒப்புதல் வாக்குமூலும் அடிப்படையில் எதிரி ஜெயச்சந்திரன் என்பவரிடமிருந்து தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட DR 27 MANI 150 வரிசையில் 5 சீட்டுகளும், DR83 குமரன் 200 என்ற வரிசையில் 17 லாட்டரி சீட்டுகளும், DR83 DEAR 50 என்ற வரிசையில் 11 சீட்டுகளும் DR 83 KUYIL என்ற வரிசையில் 29 லாட்டரி சீட்டுகளும், VISHNU 250, 34 லாட்டரி சீட்டுகளும், சுவர்ண லட்சுமி என்ற பெயரில் 10 சீட்டுகளும், தங்கம் என்ற பெயரில் 34 லாட்டரி சீட்டுகளும், நலல நேரம் என்ற பெயரில் 27 லாட்டரி சீட்டுகளும், ROSA என்ற பெயரில் 30 லாட்டரி சீட்டுகளும் ஆக மொத்தம் 207 லாட்டரி சீட்டுகளை பணம் ரூபாய் 4400 மற்றும் ரிசல்ட் பேப்பர் 7 ஆகியவற்றை பகல் 12.00 மணிக்கு அதே சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்தல் மகஜரில் கைப்பற்றியுள்ளார். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அசா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்பபடுகிறது. பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவம் இடம் மற்றும் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு

மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்துள்ளார். அது முறையே **அ.சா.ஆ.4** மற்றும் **அ,சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கு சொத்து எதிரிகளுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண். 252/2019 சட்டப்பிரிவு 5, 7(3) TNG Act மற்றும் 269, 420 இதச பிரிவின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.அந்த முதல் தகவல் அறிக்கை **அ,சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரிகளை தக்க வழி காவல் மமூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தயுள்ளார் . வழக்கு சொத்தை படிவம்–91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அந்த படிவம் –91 **அ,சா.ஆ.7 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கு சொத்தான 1) MANI 5, 2)KUMARAN 17, 3) DEAR 11, 4)KUIL 29 5)VISHNU 34, 6)SWARNALAKSHMI 10, 7) THANGAM 34, 8) NALLANERAM 27, 9) ROSA 30, 10)RESULT PAPER 7 11)CASH Rs.4400 லாட்டரி சீட்டுகள் மற்றும் பணம் முறையே அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.11 வரை குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் இம்தியாஸ், மூர்த்தி, சிவகுருநாதன், முருகன், சத்தியராஜ் ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் மீது 31.05.2021 ம் தேதி மீது சட்டப்பிரிவு 5, 7(3) TNG Act மற்றும் 269, 420 இதச பிரிவின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

சொன்ன நேரம், இடத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சொன்ன மாதிரி எந்த வழக்கு சொத்து கைப்பற்ற வில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 15.06.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU

Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,

காட்பாடி.